பிற்போக்குச் சக்திகளுக்குப் பெருந்தலைகள்

ஆதரவு தருவதா?

Phone No 4502
விலை ஒரு அணா

Regd. No. M. 5458
இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.   MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (16—4—50) ❖ வெளியீடு (17—4—50) [இதழ் 226

பெண்ணினம் முன்னேறாமல் சமுதாயம் முன்னேறாது

—(0)—

மக்களின் நன்மை பெரிதா, சர்க்காரின் கோபம் பெரிதா?

—(0)—

தேனாம்பேட்டை இளைஞர் கழக கூட்டத்தில் அண்ணாதுரை முழக்கம்

தலைவர் அவர்களே!

தோழர்களே!

தமிழ் இளைஞர்கழகத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில், நாட்டின் முக்கியமான பிரச்னையைப்பற்றிப் பேச ஆதரவு தந்ததைப்பற்றி அவர்களைப் பாராட்டுகிறோம். ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ளோம்: ஆனால் அதிக அளவுக்குப் பத்திரிகைகளில் செய்தி வராதென்று தோழர் என். வி. நடராசன் கூறினார். இருட்டடிப்பைத் தோற்கடித்தவர்கள் நாம். முன்னேற்றக் கருத்துக்கள் மக்கள் உள்ளத்தில் பதிந்து விட்டிருக்கிறது விளம்பரம் தேவையில்லை ஆகையால் கவலைப்பட வேண்டியதில்லை. டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் கூறினார் நாட்டின் நரம்பு போன்றவர்கள் வாலிபர்களென்று. வாலிபர்களாகிய நாம் ஒரு காரியத்தில் இறங்கிவிட்டபிறகு, சர்க்கார் சாகசபலம் பெற்றிருந்தாலும் தடுத்துவிடமுடியாது

மற்றவர்களைக் குறைகூறக் கூடாதென்று டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் கூறினார். பாம்பு வருகிறதைக் காண்கிறோம். வளைந்து, வளைந்து வருகிறது பாம்புதான் என்று கஷ்டமில்லாமல் கூறுகிறோம். பாம்பு பயந்து விடுமென்றல்ல. பாம்பைப் பற்றி மக்கள் அறிந்துகொள்வார்கள் என்ற காரணத்தால் தான்.

மூட்டைப்பூச்சி தொல்லை

பசிப்பிணியின் தொல்லை, ஏழை—பணக்காரன் பேதம், சமுதாயச் சண்டைகள் நாட்டைவாட்ட இது சின்னஞ் சிறு விஷயம்; இதையும் எதிர்க்கிறார்களே என்ற காரணத்தால் ஆதரிக்கிறேன் என்று கூறினார், தோழர் சச்சிதானந்தம். ஹைட்ரஜன் குண்டைப்பற்றிய கட்டுரையொன்றை நாற்காலியில் உட்கார்ந்து படிப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த நாற்காலியில் உள்ள மூட்டைப் பூச்சி ஓயாமல் கடிக்கிறது மூட்டை பூச்சியின் தொல்லையிருக்கையில் ஹைட்ரஜன்பாம் ஆராய்ச்சி புரியுமா, மனதில் படியுமா? சமுதாயத்தை முற்போக்குப் பாதையில் நடத்திச் செல்ல சமுதாயச் சீர்திருத்தம் மிகவும் அவசியமாகிறது. ஹைட்ரஜன் குண்டைப்பற்றி அறிந்து கொள்ள மூட்டைப்பூச்சியின் தொல்லையொழிய நாற்காலியை வெயிலில் போடாக வேண்டியது மிக அவசியம். மக்களை மனிதர்களாக்குகிறோம். இந்த வேலை பலர் விரும்பாததுதான் என்றாலும் யாராவது செய்தாகவேண்டும்.

15 ஆண்டுகளாகப் பெண்ணுரிமைப் போர் நடந்து வருகிறது. பலர்செலக்ட்கமிட்டிகள் முன்பு அபிப்ராயம் தெரிவித்தாகிவிட்டது. மக்களின் எண்ணத்தைப் பழகிக் கண்டறிந்த சர்க்கார், மேலும் அலசிப்பார்க்க விரும்புகிறோம் என்று கூறுவது இந்து சட்டத் திருத்த மசோதாவைத் தாமதிக்கிறார்களென்று தான் அர்த்தம். 15 ஆண்டுகளுக்கு முன்பே பலத்த ஆதரவு; இன்று வளர்ந்திருக்கிறது. குறைந்துள்ளதென்று குறைமதியாளர் கூட கூற மாட்டார்கள்.

பயன் காணும் காலம்

குறும்பவளர்ச்சியைக்கண்டு கூட அவ்வளவு திருப்தியடைய மாட்டார்கள். அவ்வளவு பூரிப்படைந்துள்ளார் முத்துலட்சுமி அம்மையார் சமுதாய முன்னேற்றத்தைக்கண்டு. நம்முடன் வந்தால் காட்டுகிறோம் நாடு முன்னேறியுள்ளதை. 15 ஆண்டுகளுக்கு முன் தனித்துப் போராடினீர்கள்; பூரிப்படைகிறோம். நாம் அவர்களுடைய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துகிறோமென்பதைக் காட்டத்தான் இக்கூட்டம். முன்பு எதிர்ப்பிற்கிடையில்பணியாற்றினீர்கள். எனினும் பயன் அதிகம் கிடைக்கவில்லை. இப்பொழுது எங்களுடன் சேர்ந்து பணி ஆற்றுவீர்களானால், உங்களுடைய குறைநாளில்வெற்றி காண்பது திண்ணம்.

காலை இந்தப்பத்திரிகையைப் புரட்டுங்கள், அதில் ஒரு முழுப்பத்தி 'இன்றைய நிகழ்ச்சிகளை'ப் பற்றி இருக்கும் அதில் எந்த அளவுக்குப் புரட்சியை அழிக்க, அதாவது ஆங்கிலத்தில் (Counter Revolution) என்று கூறுவார்கள்—எதிர்ப்பு சக்திகள் வேலை செய்கின்றனவென்பது தெரியும், பத்துபேர் கூடியிருப்பார்கள் பாரதப் பிரசங்கத்துக்கு பத்திபத்தியாக எழுதுவார்கள், பத்திரிக்கைகளில்! திருவல்லிக்கேணி தெருவோரத்திலும், மைலாப்பூர் மாடியிலும் நடக்கும் புராணப்பிரசங்கங்களுக்கும் தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளியில் நடக்கும் தொண்டரடிப் பொடியார் வாழ்க்கைவரலாற்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

தோழர் சாம்பசிவம் விரைவில் தமிழகம் வருவார்

அவரை இந்தியாவுக்கு அனுப்ப தோழர் திவி முயற்சி

சிங்கப்பூர், ஏப் 13—

மலேயா, இந்திய தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தோழர் சாம்பசிவத்தை இந்திய சர்க்கார் பிரதிநிதியான தோழர் ஜான் ஏ. திவி, ஜோகூர் போலீஸ் வலுவலகத்தில் நேற்றுமாலை சந்தித்தபோது, சாம்பசிவம் தன் தாய் நாடான இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும் என்ற தனது விருப்பத்தை அவரிடம் தெரிவித்தார். சாம்பசிவத்தின் விருப்பத்திற்கிணங்க, அவரை இந்தியாவுக்கு அனுப்ப தோழர் திவி தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

தோழர் சாம்பசிவம் திரும்பி வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த வேலூரில், தனது உறவினருடன் வாழ்வார் எனத் தெரிகிறது. சாம்பசிவம் தோழர் திவியிடம் பேசிக்கொண்டிருக்கையில்தான் கம்யூனிஸ்டு என்று சந்தேகிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டபோதிலும் உண்மையில் கம்யூனிஸ்ட் அல்லவென்றும், தொழிலாளரின் விடுதலைக்காகப் பாடுபடுவதுதான் தனது குறிக்கோள் என்றும் கூறினாராம்.

சாம்பசிவம் இந்தியாவுக்குத் திரும்பியபின், புரட்சிகரமான நடவடிக்கைகளில் பங்குகொள்ளக் கூடாது என்று தோழர் திவி கூறியதாகவும், அதற்குத் தோழர் சாம்பசிவம் சம்மதித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. தன்னை விடுதலை செய்ய முயற்சி செய்ததற்காக இந்திய சர்க்காருக்கும், சர்க்கார் பிரதிநிதி தோழர் திவிக்கும் தோழர் சாம்பசிவம் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

மந்திரிகளை விசாரணைக்கு கொண்டுவர சட்டம்

பாக்தாத், ஏப். 15—

மந்திரிகள் தவறு இழைத்தால் அவர்களை விசாரணைக்குக் கொண்டுவர அதிகாரம் கொடுக்கும் மசோதா ஒன்றை, ஈராக் பார்லிமெண்டில் கொண்டுவருவதைப் பற்றி சர்க்கார் யோசித்து வருவதாக 'இஸ்திக்லால்' கட்சியின் பத்திரிகை ஒரு செய்தியைப் பிரசுரித்திருக்கிறது.

இம்மாதிரி மசோதா ஒன்று இப்பொழுது எகிப்து பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மூன்று யூதர்கள் கைது

அம்மான், ஏப். 15—

ரஷ்யாவிடம் முக்கியமான ராணுவ ரகசியங்களை விற்றுவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு, மூன்று யூத ராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

மேற்கொண்டு புலன் விசாரித்ததில் ஸோவியத் ஏஜெண்டுகளிடம் இம்மாதிரி ரகசிய தஸ்தாவேஜுகள் இருப்பது தெரியவருகிறது.

யூதர் ராணுவத்தில் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், டெல் அவீவ் மிரதேச கமாண்டரும் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பன்னீராயிரம்பேருக்கு ஒரே ஒரு மருத்துவர்

உலகில் 12000 மக்களுக்கு ஒரு மருத்துவர் வீதமே மருத்துவர்கள் உள்ளனர் என்று உலக சுகாதார கழகம் கணக்கிட்டிருக்கிறது. இக்குறைபாட்டை நீக்க புரபசர் ரேனி என்பவர் தலைமையில் ஒரு நிட்டக் குழு அமைப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சுல்தானுக்கு சுதந்திரம் தருக

லண்டன், ஏப். 15—

இந்தோனேஷியாவில், வெஸ்டர்லிங்குடன் சேர்ந்து கலகம் விளைவித்ததாகக் கூறப்படும் சுல்தான் ஹமீத் கைது செய்யப்படாமல், அவர் சுதந்திரத்தைப் பெற உதவி செய்ய வேண்டுமென்று ஹாலெண்ட் ராணி ஜூலியானாவிடம் சுல்தானின் வெள்ளை மனைவி மனு செய்துகொண்டு இருக்கிறார்.

"நபுலஸ்" கலவரம்

அம்மான், ஏப். 15—

நபுலஸில் சமீபத்தில் ஏற்பட்ட கலகத்திற்கு காரணம் கம்யூனிஸ்டு ஏஜெண்டுகள்தான் என்று ஜோர்டன் உள்நாட்டு மந்திரி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்த ஏஜெண்டுகள் நபுலீக்கை விட்டு அரபுகள் வெளியேற வேண்டும் என்றும், யூதர்களுடன் ஒன்று சேர வேண்டுமென்றும் பிரசாரம் செய்துவந்தனராம். இப்பொழுது நபுலஸில் பொதுக்கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

யானைக்கு 'அபார்ஷன்!'

சென்னை, ஏப். 14—

பிராணிகளிலேயே உருவத்தில் மிகவும் பெரிதான யானை, கருப்பைக்குள் சில அங்குல நீளமுள்ளதாகவே இருக்கிறதென்பதை இங்கு யானைக்கு ஏற்பட்ட கருச்சிதைவின் (அபார்ஷன்) போது வெளியாயிருக்கிறது.

காமாவின் ஆதரவாளர்—எதிர்ப்பாளரிடையே கைகலப்பு!

—(0)—

போலீசார் கண்ணீர்ப்புகை உபயோகித்தனர்

லண்டன், ஏப். 15—

பெசுவானலாண்டில், பாமன் வாட்டோ பிரதேசத் தலைநகரான சாரபோவில் காமாவின் ஆதரவாளர்க்கும், அவருடைய மாமாவின் ஆதரவாளருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதால், போலீஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்து சண்டையை நிறுத்தினர்.

கால் நடையைக் கடத்திச் செல்வதன் சம்பந்தமாய் ஏற்பட்டதகராறு என்று சொல்லப்படுகிறது. 9 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஒரு மலை சாதி வகுப்பினன் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். தன் மனைவியைப் பார்க்கவேண்டுமென்று காமா செய்துகொண்ட மனு தவறான அபிப்பிராயத்தினால் நிராகரிக்கப்பட்டதென்று ஜோஹென்னெஸ்பர்க்கிலிருந்து கிடைத்துள்ள செய்திகூறுகிறது.

அவர் மனு குறித்து ஆலோசிக்கப்படுவதாக உத்யோக பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

அனுப்பிவிட்டீர்களா!

❖

தோழர்களே!

முற்போக்காளர்களே!

முன்னேற்றக் கழகங்களே!

இந்து சட்டத்திருத்த மசோதா குறித்து உங்களுடைய ஆதரவு செய்திகளை டாக்டர் அம்பேத்காருக்கு அனுப்பிவிட்டீர்களா?

புதுடில்லி மாநாடு கூடும் தேதி எப்ரல் 20.

இதுகாறும் அனுப்பத் தவறியவர்கள் இன்றே, இப்பொழுதே அனுப்புங்கள், (ஆ-ர்)

இந்து சட்ட சீர்திருத்த மசோதா

[டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி]

இந்தச் சீர்திருத்த மசோதா பல வருஷங்களுக்கு முன்னரே சட்டமாக்கப்பட்டிருக்க வேண்டும். இதனைச் சட்டமாக்கவேண்டுமென்ற கிளர்ச்சியை மாதர் சங்கங்களும், நேர்மையையும், உண்மையான தர்மத்தையும் உணர்ந்துள்ள பல பொதுநல வாதிகளும் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்தனர். இதைப் பற்றிய சர்ச்சைகளும், வாதப் பிரதிவாதங்களும், சாட்சியம், விசாரணை முதலியனவும் நடந்து, "இது ஞாயமானது" என்ற முடிவுக்கு வந்தே பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதனை இப்போது, அடிமைத் தளையிலிருந்து நமது பாரத பூமி விடுதலையடைந்து, சுதந்தர இந்தியக் 'குடியரசு' ஆகிய பிறகு, ஒரு சிலர் எதிர்க்க முற்பட்டிருப்பது மிகவும் ஆச்சரியத்தையும், துக்கத்தையும் அளித்திருக்கிறது.

தாய்மைக்கு, பெண்மைக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் இதை எதிர்ப்பதும் முக்கியமான ஒன்றே என்பதை யோசித்தால் விளங்கும். பெண்ணாய்ப் பிறந்துவிட்ட காரணத்தால், சொத்துரிமையையும், ஆண்களுக்குள்ள மற்ற உரிமைகளையும் பெண்கள் இழப்பதென்பது நீதியாகுமா? பெண்கள் அடிமைகளாக, விலங்குகளாக நடத்தப்படுவதற்கு முக்கிய காரணம் பெண்களுக்குத் தகப்பன் சொத்திலும், புருஷன் சொத்திலும் உரிமை இல்லாததே. தாய் தந்தைக்கு ஒரு ஆணும், பெண்ணும் பிறக்கிறார்கள். பெற்றோர் தம் ஆண் குழந்தையிடமும், பெண் குழந்தையிடமும் ஒரே மாதிரியான, சமமான அன்போடுதான் இருக்கிறார்கள். இருவரையும் இரு கண்கள் போல்தான் பாவிக்கிறார்கள். எந்த தாய் தந்தையும், மகளை விட மகன் மேல் தான் அன்பும், பிரியமும் அதிகம் என்று சொல்லவே மாட்டார்கள். தாய் தந்தை சம்பாதிக்கும் சொத்து அவர்கள் பெற்றெடுத்து ஒரே விதமான அன்பு செலுத்தி வளர்க்கும் மகன், மகள் இருவருக்கும் சமமாக அனுபவிக்கும் உரிமை இருப்பதுதான் ஞாயம்—நீதி. ஆண் மகனுக்குத் தான் சொந்தம், மகளுக்கு உரிமை இல்லை என்பது கொடுமை, அநீதி, ஒருதலை பட்சமான ஞாயம் என்பதை, எந்த ஞாயவாதியும் மறுக்க மாட்டான்.

சொத்துரிமை பெண்களுக்கு இல்லாததால் தான் பெண்ணுலகம் இன்று கொடுமைக்கும், மிருகத்தனத்துக்கும், அடிமைத்தனத்துக்கும் ஆளாகி, விலங்குகள் போல் நடத்தப்பட்டு, ஆதரவற்ற நிலையில் தவிக்கிறது. இது நாட்டின் நல்வாழ்வுக்கே ஒரு களங்கம். 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்' இந்த நாட்டிலே என்று வெறும் வாய் வேதாந்தம் பேசிக்கொண்டே, பெண்கள் இன்று சட்டசபைகளிலும், மந்திரி சபைகளிலும் கூட ஸ்தானம் வகிக்கிறார்கள் என்று சிலர் கூறித் திரிவது ஒரு பெரிய கண் துடைப்பு வித்தை. நூற்றுக்கணக்கான சட்டசபை அங்கத்தினர்களில் எங்கோ ஒன்றிரண்டு பெண்மணிகள் இருந்துவிட்டால், அவர்களுக்குப் பெரிய சம உரிமை கொடுத்துவிட்டோம் என்று கூறுவது வெறும் பசப்புவார்த்தை. சொத்துரிமை இல்லாததால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை ஆராய்வோம், கல்யாணம் ஆகாத பெண்ணாயிருந்தால் அவளை மணம் பேசுவோர் பணம் பேசுகிறார்கள். அவளுக்குத்தான் சொத்துரிமை எள்ளளவும் இல்லையே! கல்யாணம் செய்துகொண்டால், பணம் கொடுக்கட்டும் என்று விலை பேசுகிறார்கள். அவர்கள் கோரும் விலை கொடுக்கவில்லையென்றால் விட்டுவிடுகிறார்கள். இந்த பேரம் பேசும் கொடுமைக்கு ஆளாகி இளம்பெண் எண்ணாததும் எண்ணிக் கலங்குகிறாள். அவளுக்குமாத்திரம் சொத்துரிமை இருக்குமானால் எத்தனைபேர் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டுவருவார்கள். அவளும் போனால் வராது என்று நினைப்பின்றி, பொறுமையுடன் இருந்து, தனக்கு பிடித்த மணாளனைத் தேர்ந்தெடுத்து இன்பமுடன் இல்லறம் நடத்துவாள் அல்லவா? பல பெண்களுக்கு ஆண் கணக்கில் வரன் கிடைக்காமல் இருப்பதும், மணமான பெண்களில் பலர் புருஷனால் கைவிடப்படுவதும், புறக்கணிக்கப்படுவதும், திக்கில்லா அநாதைகளாய், ஆதரவற்ற அபலைகளாய் பெண்கள் வேதனையடைவதற்கும் மூலகாரணம், அவர்களுக்குச் சொத்துரிமை இல்லாததேயாகும்.

இரண்டாவதாக, ஒரு பெண்ணின் புருஷன் துர் அதிர்ஷ்டவசமாக இறந்து விட்டால் அவன் சொத்தில் அவளுக்கு துளி உரிமையும் கிடையாது. அவன் சொத்தை, அவனது பங்காளிகள் அனுபவித்து வருகிறார்கள். புருஷனது மரணத்தால் விதவையாகி உலகில் வேதனையின் சிகரத்தில் நின்று தவிப்பது மட்டுமின்றி, அவள் தனது சவரட்சணைக்கும், பாதுகாவலுக்கும், அவள் புருஷனின் பங்காளிகளிடம் கையேந்தி வாழ வேண்டியிருக்கிறது. அவன் வீட்டு நாய்க்கும், பூனைக்கும் இருக்கும் உரிமை கூட அவளுக்கு இருப்பதில்லை. அவளது புருஷனது சொத்து உருவானதற்கு அவள் புருஷன் மாத்திரம் காரணமல்ல—மனைவியும் அவள் கடமையை ஒழுங்காகச் செய்கிறாள். வீட்டில் மனைவிளக்காக விளங்கி, புருஷனையும், குழந்தைகளையும் ஊட்டி வளர்த்து காப்பாற்றி, புருஷன் வருவாயைத் தகுந்தபடி செலவு செய்து சரியாகச் சேமித்து வைக்காவில்லையானால், அவன் புருஷனுக்குச் சொத்து எப்படி ஏற்பட்டிருக்கும். உண்மையில் பார்த்தால், ஒரு புருஷனின் சொத்தை உண்டாக்கும் காரணகர்த்தா மனைவிதான். தேனீக்கள் உடலை வருத்திச் சேர்த்துவைக்கும் தேனை, யாரோ சம்பந்தமில்லாதவர் அடித்துக்கொண்டு போவது போல் தான், ஒரு மனைவி சேர்த்து வைக்கும் சொத்து, புருஷன் இறந்த பிறகு, அவன் பெயரால் அவனது பங்காளிகள் அனுபவிப்பது என்பதும். அவளுக்கு ஒரு துரும்பு அதில் உரிமை இல்லையென்பதும் பெரிய அநியாயம் என்பதை பகுத்தறிவுள்ள எவரும் எளிதில் உணருவர்.

விவாகரத்து:—விவாகரத்தில் இந்து மாதர்களுக்கும் சம உரிமை இருக்கவேண்டும். மகம்மதியப் பெண்களுக்கும், கிறிஸ்துவப் பெண்களுக்கும் இம்மாதிரி உரிமை இருக்கும்போது, இந்து பெண்களுக்கு மாத்திரம் இல்லாமலிருப்பது இந்து மதத்துக்கே ஒரு இழுக்கு என்று சொல்ல வேண்டும். பிற மதங்களை விட இந்து மதத்தில்தான் பெண்களை மிக உயர்வாக—தெய்வ அம்சமாக நினைக்கும் பெருமையும், ஸ்தானமும் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இந்துப் பெண்களுக்கு விவாகரத்து உரிமையில்லாதிருப்பது ஒரு கொடுமைதான். நாகரீகமடைந்த பல நாடுகளிலும் இந்த உரிமை அளிக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். விவாகரத்து உரிமை அளிப்பதென்பது நாகரீகத்தின் சின்னம் என்று கூட சொல்லலாம். விவாகரத்துரிமை இல்லாமையால் பெண்கள், ஆண்களின் கைப்பாவையாய், அடிமை விலங்குபோல வாழ வேண்டியிருக்கிறது. மனைவி, மனைவியின் உண்மை ஸ்தானத்தில் இல்லை. அவள் தன் புருஷனுக்கு வேலைக்காரி, பணியாள், அதாவது தொண்டு செய்யும் அடிமையாகத்தான் இருந்து வருகிறாள்.

1. புருஷன் தீராத தொத்து நோயாளியாகவிருத்தல்,
2. தெளியாத பைத்தியம் பிடித்தவனாய் இருத்தல்,
3. ஆண் தன்மைபற்றவனாய் இருந்தால்,
4. மத மாற்றம் அடைந்திருத்தல்,
5. மனிதத்தன்மையற்ற கொடுமை இழைத்தல், முதலிய ஞாயமான காரணங்களை ஆதாரமாகக் கொண்டு இருந்தால் மாத்திரமே விவாகரத்துரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

இதில் யாருக்கும் எவ்விதமான தீமையும், குறைபாடும் இருக்க முடியாது. ஆகவே, இந்த விவாகரத்துரிமையை மறுப்பது, மனித சமுதாயத்தில் ஒரு பகுதியின் உரிமையைப் பறிப்பதாகும். மேலும் நமது நாட்டில் இப்போது ஜாதிபேதமின்றி பெருத்த அளவில் பதிவுத் திருமணம் நடைபெற்று வருகிறது. இது வரவேற்கத் தக்கதுதான். அந்தப் பதிவு மணம் (ரிஜிஸ்டர் மணம்) செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு, இதே விவாகரத்துரிமை இருக்கிறது. அந்த மாதிரி தம்பதிகளில் சிலரும் இதை எதிர்க்கிறார்கள் என்பதுதான் விசித்திரமாயிருக்கிறது.

எனவே, இந்தச் சீர்திருத்த மசோதா ஞாயமானதும், சரியானதும் ஆகும். இதைச் சட்டமாக்குவதில் காலதாமதம் செய்வது கூடாது உடனடியாகச் செய்ய வேண்டிய காரியம் என்பதை உணர வேண்டும்.

(தேனாம்பேட்டை இளைஞர் கழக ஆண்டு விழாவில் ஆற்றிய சொற்பொழிவு)

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது

மத்திய வேலையளிப்பு ஆலோசனைக்குழு தீர்மானம்

புதுடில்லி, ஏப். 12—

தேசத்தில் வேலை கிடைக்கும் வசதி வரவர மோசமடைந்து வருவதால், வேலைதேடிக் கொடுப்பதற்காகத் திட்டமிட்டு முயற்சிசெய்ய வேண்டும் என்றும், தற்போது நடந்து வருகிற தொழில் பயிற்சித் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றும், 10-ந் தேதியன்று டில்லியில் கூடிய மத்திய வேலையளிப்பு ஆலோசனைக் குழு யோசனை தெரிவித்திருக்கிறது. சீரமைப்பு வேலையளிப்பு டைரெக்டர் ஜெனரல் டாக்டர் என். தாஸ் தலைமை வகித்தார்.

மத்திய, மாகாண சர்க்கார்கள், முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளடங்கிய முத்தரப்பு ஸ்தாபனமான இக்குழு சீரமைப்பு வேலையளிப்பதற்காக நிறுவப்பட்டது.

1949-ம் ஆண்டு நெருக்கடி நிலவிய வருடமென்று தலைவர் தெரிவித்தார். சர்க்கார் காரியாலயங்களில் காலி ஸ்தானங்களில் ஊழியரை நியமிக்கும் போது இந்த வேலையளிப்புஸ்தாபனத்தின் உதவி நாடவேண்டுமென்று மத்திய சர்க்கார் இலாகாக்களுக்கும் எல்லாம் உள்நாட்டு மந்திரிசபை உத்தரவிட்டிருப்பதையும், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகவும் போட்டி பரீட்சைமூலமாகவும்தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்கள் மட்டிலுந்தான் இதற்கு விலக்கு என்பதையும் அவர் அறிவித்தார். மாகாண சர்க்கார்களும் இதுபோல் உத்தரவிட வேண்டும் என்று இந்த ஸ்தாபனம் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்து சட்ட திருத்த மசோதா மாநாடு

புதுடில்லி, ஏப் 15—

பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் சிலரும், இந்த சட்டத் திருத்த மசோதா பற்றிய செலக்ட் கமிட்டியில் அங்கம் வகித்த அங்கத்தினர்கள் சிலரும், மற்றவர்களும் கூடிய ஆரம்ப மாநாடொன்று, இந்திய சர்க்கார் சட்ட மந்திரி, டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் தலைமையில் 1950 ஏப்ரல் 20-ந் தேதியன்று புதுடில்லியில் கூடும்.

இந்து சட்டத் திருத்த மசோதா பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முன்னால், பலதரப்பட்ட பொதுஜன பிரதிநிதித்துவ அபிப்பிராயங்களை சர்க்கார் கேட்டுத் தெரிந்துகொள்வார்கள் என்று, பார்லிமெண்டின் சென்ற கூட்டத்தில் பிரதம மந்திரி கூறியதை யொட்டிக் கூட்டப்படும் இந்த மாநாடானது, குறிப்பிட்ட சில பிரச்னைகள் விஷயமாக சர்க்கார் ஒரு முடிவான தீர்மானத்திற்கு வருவதற்கு முன், அவை பற்றி விவாதித்து அங்கத்தினர்களின் கருத்துக்களையும் அறிந்துகொள்ளும்.

மாணவர்கள்கூடி கலைக்கூடம் அமைத்தனர்

லக்னோ, ஏப். 11—

தாங்கள் படிக்கும் பள்ளிக்கூடங்களின் தேவைகளைத் தங்கள் உழைப்பின் மூலமே பூர்த்தி செய்ய மாணவர்கள் தயாராக இருக்கிறார்கள். அநேகமாக ஐக்கிய மாகாணத்திலுள்ள எல்லாப்பள்ளிகளையும் சேர்ந்த மாணவர்கள் தங்கள் பள்ளிகளுக்காக வேலை செய்யத்தயாராக இருக்கிறார்கள். ஆசிரியர்களும் ஒத்துழைக்கத்தயாராக இருக்கிறார்கள்.

சில பள்ளிகளில் பாராட்டத்தக்க வேலைகள் மாணவர்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைச்சேர்ந்த மாணவிகள், தங்கள் பள்ளியின் கட்டடங்களுக்குச்செல்லாம் தாங்களாகவே வெள்ளையடிக்கிறார்கள்.

மீரட் பிராந்தியத்தைச் சேர்ந்த சில கல்வி ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள், வகுப்பு அறைகளைக் கட்டி முடித்திருக்கின்றனர். சில பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் உட்காருவதற்கான இடங்களைச் செய்திருக்கிறார்கள்.

ஜீவரக்ஷக வேலைகளிலும் மாணவர்கள் ஈடுபடுகிறார்கள். ஆஸ்பத்திரிகளில் பிரயாணிகளின் பக்கத்திலிருந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்கிறார்கள்.

கல்வி இலாகா டைரெக்டர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மாணவர்கள் இதுபோன்ற நல்ல காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இனி நடப்பவை

சேத்துப்பட்டு:-மக்கள் ஊழியர் மன்றச் சார்பில் தமிழ் வருட புத்தாண்டுவிழா 16-4-50அன்றுமாலை இவ்வூர் நகராண்மைக் கழகப் பெண்கள் பள்ளியில் கொண்டாடப்பெறும். அதுபோது தோழர் டாக்டர் ம. சந்தோஷம், அவர்கள் தலைமை வகிப்பார்.

தோழர்கள் ஆர். ரஞ்சன், பி. ஏ. இரா. செழியன் எம். ஏ., ஜக்சான் ஆகியோர் "நாமும் கலையும்" என்ற பொருள் பற்றி பேசுவார்கள்.

* * *

அடையாறு:—அவ்வை ஆசிரமத்தின் பத்தொன்பதாம் ஆண்டுவிழா 17—4—50 அன்று மாலை நடைபெறும். தோழர் கோபால் ரெட்டி தலைமை வகிப்பார். தோழியர் எம். என். லீலாவதி பரிசு வழங்குவார்.

* * *

பிரம்பூர்:— இவ்வூர் பாரக்ஸ் இரவு பாடசாலை நிதிக்காக 16—4—50 அன்று மாலை பிரம்பூர் ஆலில், தோழியர் குமாரி எஸ். வி. வாசந்தா குழுவினரால்நாட்டியக் கச்சேரி நடைபெறும். தோழர் பி. வி. செரியன் தலைமை தாங்குவார்.

* * *

தேனாம்பேட்டை:— நாடகக்கழகத்தின் சார்பில், 16—4—50 அன்றுமாலை காங்கிரஸ் மைதானத்தில் 'மகத இராவணன்' நாடகம் நடைபெறும் தோழர் கோபால் ரெட்டி தலைமை வகிப்பார்.

[கற்பனை]

சரிந்தகோட்டை

[தங்கவேலர்]

பக்கத்துவீட்டு. சாந்தா! இக்பால் சிருஷ்டித்த கலா, ஷேக்ஸ்பியர் காட்டிய கிளியோபாட்ரா...என்றுஎண்ணிக்கொண்டிருந்த என் ஆசைக்கு எங்கிருந்தோ வந்த சந்திரன் மூடியிட்டு மறைத்தான். சந்திரனின் சொத்தாகிவிட்டாள் சாந்தா! அறிமுகமாகத ஒருவன்—அவனேடு அவள் வாழ்வைப் பிணைத்துவிட்டார்களே என்று எனக்கு அவஸ்தை!

என் சந்தேகத்தை விளக்கிக்கொள்ள "அம்மா! சாந்தாவுக்கு, சந்திரனைப் பிடிக்குதாம்மா"...என்று என் தாயிடம் எழுப்பிய கேள்விக்கு, "உனக்கென்டா அந்தத்தொல்லை! பிடிக்குதோ இல்லையோ இனி வேண்டாம்ணு அவன் விடவா போருன்"......என்று என் தாயிடமிருந்துவந்த பதில் முடிவதற்குள்—புதுப்புடவையின் சலசலத்த சப்தத்தோடு ஓடிவந்த சாந்தா துள்ளிகுதித்து என் அறையின் முன்னே நின்ருள். அவளோடு துணை வந்த அவள் தங்கை லலிதா,—கையோடு கொண்டு வந்தஎன் ஒரு கட்டுப்புத்தகங்களை மேசையிலே வீசி எறிந்துவிட்டு "அக்கா! ஊருக்குப்போருளாம். ஒங்ககிட்டே சொல்லச் சொல்லீட்டா" என்று கூறிவிட்டே ஓடி மறைந்தாள்.

போகாத பாதை முதலிலே பயத்தைத்தான் தருகிறது, ஆனல் மெல்லமெல்ல நடந்து பழகிவிட்டாலோ...! முதலில் அந்தப்புதிய பாதையில் இறங்கவே பயந்தாள் சாந்தா! இப்போது சந்திரனின் துணையோடு மெல்ல மெல்ல நடந்து என் பார்வைக்கும் அப்பாற்பட்ட தூரத்துக்கு நகர்ந்துவிட்டாள்.

* * *

அமுதமொழி சிந்தி—அழகு நடைபோட்ட அந்த அழகியின் பிரிவு என் உள்ளத்திலே ஒரு பித்தத்தைத் தெளித்தது; தனிமை! அதிலே இனிமை இருப்பதாகக் கூறுகிருர்களே அதையுந்தான் பார்ப்போமென, பையுங் கையுமாக ஊருக்கு ஊர் இடமாறிக்கொண்டிருந்தேன்... வீட்டுத் தொல்லையையும், அந்த அழகி பிம்பத்தையும் மறக்க!

* * *

"அண்ணு"... என்ற குரல் காற்றிலே கலந்துவந்து என் காதிலே மோதியது!

திரும்பிப் பார்த்தேன்.

புன்னகை மின்ன வாசல் திண்ணையிலே நின்றுகொண்டிருந்தாள் சாந்தா. சிலையாக நின்றுகொண்டிருந்த என் உடல் 'வாருங்கள்' என்ற அவளின் அழைப்பைக் கேட்டு, சிறிது அசைந்து கொடுத்தது! அவளை நெருங்க என் கால்கள் தயங்கின, தழுதழுத்தக் குரலிலே வார்த்தை வெளிவந்தது...'சாந்தா! நீ இங்கேயா...' வார்த்தை முடிவதற்குள்ளேயே பதில்கூறிவிட்டாள்... 'ஆமாண்ணு! இதோ வீடு. வாருங்களேன்'

அவள் அழைப்பை அச்சம் மறுத்தாலும், ஆசை மறுக்கவில்லை! தட்டித் தடுமாறி வாயல்படி ஏறி அவள்முன்னே நடக்க நான் அவளைத் தொடர்ந்தேன்.

உள்ளே இருந்தான் சந்திரன்! எனக்கு அறிமுகமில்லாதவன். அறிமுகம் செய்து வைத்தாள் சாந்தா! 'வாருங்கள்'' என்று வரவேற்ற சந்திரனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். வாடி இருந்தது அவன் முகம், சாந்தாவிடமிருந்த வஞ்சை அவனிடமில்லை.

எவனே தனக்கு அறிமுகமில்லாத ஒருவனை தன்மனைவி வலிய வீட்டுக்கு இழுத்து வந்து தன்னிடமே அவனை அறிமுகம் செய்து வைத்தது சந்திரனுக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ; அதனுல்தான் அவன் பார்வையிலே கலக்கமிருந்தது.

காபி சாப்பிட்டான பிறகு சந்திரன், நான், சாந்தா எல்லோருமாகச் சேர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். சாந்தா, பேச்சின் இடையிடையே சமீபத்திலே எழுதி வெளியான எனது கதை, கட்டுரைகளைப் பற்றியே புகழ்ந்துகொண்டிருந்தாள். அந்தக் கதையை மிகநன்ருய் முடித்திருக்கிறீர்களண்ணு! இந்தக்கதைமுடிவே புரியவில்லையே......' இப்படி எதை எதையோ அடிக்கடிக் கேட்டு என்னைப் பேசத் தூண்டிக்கொண்டிருந்தாள். அவள் பேசும்போது தன் முத்துப்பற்களைவெளியே காட்டி. கையை நீட்டி நீட்டிப் பேசினுள்......அவள் பேசுவதே ஒரு தனி கலையாகயிருந்தது.

அவள் எழிலுருவம் என்னை மயக்கி எங்கோ இழுத்துச் செல்லும்—ஆனல், அவள் வார்த்தையைச் சிரிப்போடு கலந்து வீசி விட்டு 'அண்ணு' என்று அழைக்கும்போது. என் எண்ணம் போட்ட தப்புக் கணக்குக்காக மண்டையிலே பலமான அடி விழுவது போன்ற பிரமை!

இப்படி எவ்வளவு நேரம் நானும் பார்த்துக்கொண்டிருந்தேனே—அவளும் பேசிக்கொண்டிருந்தாளோ தெரியவில்லை!

'சாந்தா!' என்ற சந்திரனின் கலவரக் குரல், நானும் இங்கு தானிருக்கிறேன் என்பதைச் சொல்லாமல் சொன்ன பிறகு தான் உணர்ந்தேன். புயல் ஆரம்பித்துவிட்டதே என்ற பயம் என் மனதைக் கவ்வியது.

சாந்தா எழுந்தாள்!

சந்திரன்கூறினுன், 'சாந்தா இன்று......''அவன் வார்த்தையை முடிக்கவிடாது தொடர்ந்து சொன்னுள் ' சினிமாவுக்குப் போவதாகயிருந்தோமே-நல்ல வேளை மறந்துவிட்டேன்... அண்ணுநீங்களும் வாருங்களேன்!...''வாருங்கள் என்று உபசாரத்திற்காக அழைப்பதுபோலல்ல! அவசியம் வந்துதான் தீர வேண்டும் என்று வற்புறுத்துவதுபோல இருந்தது அவள் பார்வை! சந்திரனும் இந்தச் சமயத்திலே உள்ளன்போடு அல்ல, அலட்சியமாக அழைத்தான்.

'வாருங்களேன் போய் வருவோம்' என்று!

'என்ன படம்' என்று இழுத்த என் கேள்விக்கு... 'ஹாம்லெட்' என்ற பதிலைப் போட்டு முடித்தான் சந்திரன்

'ஷேக்ஸ்பியர் எழுதிய நவீனமா' என்று என் அறிவுத்திறனை அவிழ்த்துவிட்டேன்.

'ஷேக்ஸ்பியர் என்ருல பிடிக்குமே உங்களுக்கு...... வாருங்களண்ணு...' கெஞ்சுங் குரலிலே கூறிவிட்டு தூணைப் பிடித்துக்கொண்டு நின்ருள் சாந்தா!

எதிர் வீட்டு வானெலிப் பெட்டியிலிருந்து வெளியான 'நல்ல சமயமடா இதை நழுவ விடுவாயோ' என்ற தேசிகரின் பாட்டு சாந்தாவின் கெஞ்சுங் குரலுக்கு என்னைத்தலையாட்டி ஒத்துக்கொள்ளச் செய்தது!

சந்திரன் முன்னே நடக்க, சாந்தாவும் நானும் அவன் பின்னே தியேட்டரை நோக்கி நடந்து கொண்டிருந்தோம்.

தியேட்டருக்கு உள்ளே நல்ல கூட்டம், மாடியிலே அந்தப்பக்கம் சந்திரன். இந்தப் பக்கம் நான், இடையே சாந்தா இப்படியாக அமர்ந்தோம்!....படமும்ஆரம்பமாகிவிட்டது. சிறிதுநேரத்திலே சாந்தாவின் சலசலத்த பேச்சும் ஓய்ந்து படம் பார்க்க நிம்மதி ஏற்பட்டது. அந்தப் படம 'ஹாம்லெட்'', நான் முன்னேயே பார்த்த படந்தான்...இதனுல் என் பார்வை எங்கெங்கோ நிலைத்து நில்லாது சுழன்றது!

உள்ளே மின் விசிறிகள் ஓடியும் ஒரே புழுக்கம்...! முகத்துக்கு நேரே அப்படியும் இப்படியுமாக ஆட்டிக்கொண்டிருந்த என் கைக்குட்டை அவன் மடியிலே போய்த் தவறி விழுந்தது! நான் வேண்டுமென்று செய்யாத பிழை! கைக்குட்டையை எடுப்போமா, வேண்டாமா என்ற எண்ணம் என்னைத் தயக்கிக் கொண்டிருந்த போதே—வளையல்கள் ஒலி செய்ய கைக்குட்டையை எடுத்து என் முன்னே நீட்டினுள் சாந்தா.

ஆரம்பத்திலிருந்தே படத்தின் மீது ஒருகண்ணும், என் மீது ஒருகண்ணுமாகயிருந்த சந்திரனுக்குப் புரியாத இந்த எனதுபோக்கு ஒருவிதக் குழப்பத்தை யுண்டுபண்ணிவிட்டது.

ஒருவழியாகப் படமும் முடிந்தது 'ஷேக்ஸ்பியரின் கைவரிசை முடிந்தது' என்று கூறிக்கொண்டே எழுந்தேன் சிரித்துக்கொண்டே என்னைத் தொடர்ந்தாள் சாந்தா. மெய்காப்பாளன்போல உற்று நோக்கிக்கொண்டே அவளுக்குப் பின்னே நடந்துவந்தான் சந்திரன்.

சாந்தாவின் வீடு வந்தது! மீண்டும் பேச்சு...! இடையே எங்களிடமிருந்து சந்திரன் பிரிந்துவிட்டான்! அவனைத் தொடர்ந்தே அவளும் போய் விட்டாள்!

• • •

சந்திரனையும், சாந்தாவையும் ஏற்றிக்கொண்டு ஆடிப்பாடிச் சென்ற உல்லாசப் படகிலே ஓட்டைபோடும் வேலை என் மனச்சாட்சிக்கே பிடிக்கவில்லை. யாருக்கும் தெரியாமல் கட்டிய அந்த ரகசியக்கோட்டையை யாருக்கும் தெரியாமலே தகர்த்துவிடலாமே என்ற எண்ணப்பாடு ஒரு புறம்.

'சீ! மூதேவி' என்ற சுடு சொல் அதைத் தொடர்ந்து விம்மும் குரல், சந்திரனும்—சாந்தாவுமிருந்த அறையிலிருந்துவந்தது. திடுக்கிட்டுப் படுக்கையிலே எழுந்து உட்கார்ந்தேன்.

எனக்கு அருகிலிருக்க மெழுகுவத்தி ஒளியைத் தவிர வேறு எங்குமே இருட்டு! உற்றுப் பார்த்த என் கண்களுக்கு எதிரே அந்த உருவம் அசைந்தது. அசைந்த உருவத்தின் வருகை என்னை நோக்கித்தானிருந்தது

பாதச்சிலம்பு பாட........ கைவளையல்கள் குலுங்கி ஆட என்னை நோக்கிவந்த உருவத்தை, யார் என்று புரிந்து கொள்ளாமலிருக்க நான் என்ன பித்தனு.

இன்னும் ஓரடிதான் பாக்கி அந்த உருவத்துக்கும் எனக்குமிருந்த இடைவெளி.

காஷ்மீர் கம்பளத்தையும் உள்ளே துளைத்துக்கொண்டு வாட்டிய பனி எங்கோ ஓடிவிட்டது. மேலெல்லாம் ஒரேயடியாக வியர்த்துக்கொட்டியது

வந்த உருவம் அழைத்தது 'அண்ணு' என்று! ஒரே அடி மண்டையிலே கிறுகிறுத்து கீழே விழுந்தேன்—யாருக்கும் தெரியாமல் நான் கட்டிய அந்த ரகசியக் கோட்டையிலிருந்துதான் தலைகுப்புற விழுந்தேன்.

'சாந்தா' என்று என்னையுமறியாமல் இடி முழக்கத்திலே கத்தியேவிட்டேன்,

"அண்ணு அவர் ரொம்ப சந்தேகப் பேர்வழி அண்ணு நீங்க இதற்காக வருத்தப் படாதீங்க...''

சரிந்த கோட்டையிலே சிக்கிய எனக்கு, சாந்தா கூறிய வார்த்தை இது.

நான் சமாதானம் கூறுவதற்குள்ளேயே அறைக்குள் அடி எடுத்து வைத்து விட்டாள்.

தூரத்திலேயிருந்து ஓசை கொடுத்த புகைவண்டியின் ஒலம்—புத்தருக்கு ஞான உதயமான போதிமரம் போலவே எனக்குப்பட்டது!

சிதறிக்கிடந்த புத்தகங்களை எடுத்து கைப்பையிலே திணித்தேன்; என் கால்கள் வாசலுக்கும் வெளியே நடந்து வந்துவிட்டன.

பையுங் கையுமாக அந்த நேரத்தில் நடந்து கொண்டிருந்த என்னை யாராவது பார்த்தால் பைத்தியம் என்று எண்ணுமலிருந்தால் நிச்சயம் அவர்கள் பைத்தியந்தான். புகைவண்டி நிலையத்தை நெருங்க நெருங்க என் நடை ஓட்டமாக மாறியது.

சாந்தாவின் குடும்ப நிலையிலே வீசிய புயலுக்கு—நான் ஒரு கருவி!

சந்திரனின் மனப் போராட்டத்துக்கு நான் ஒரு காரணம்.. என்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஓடி வந்ததிலே ஒரு திருப்தி.

லண்டன், ஏப். 15—

மேஹாவில் வேலை செய்துவரும் புதைபொருள் ஆராய்ச்சி கோஷ்டியினர் பிர்தளேயிலுள்ள இரு செப்சிலைகளை கண்டெடுத்திருக்கின்றனர்.

இவை ஒவ்வொன்றும் 30 அங்குல நீளம், இருக்கிறதாம்.

பிரிட்டன் - செஞ்சனு தூதுவர் பிரச்னை

லண்டன், ஏப். 14—

செஞ்சீனுவை, பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரித்து மூன்று மாதமாகியும் இரு நாடுகளுக்குமிடையே ஸ்தானிகர் பரிவர்த்தனை விஷயமாக இன்னும் முட்டுக்கட்டை இருந்துகொண்டே வருகிறது.

இரண்டு விஷயங்களில் தெளிவு ஏற்படும்படி செஞ்சீனு பிரிட்டனைக் கேட்பதாலேயே இத்தாமதம் என்று தெரிகிறது.

அவை, 1. ஐ.நா.வில் செஞ்சீனு மெம்பராகும் விஷயத்தை பிரிட்டன் ஆதரிக்கப் போகிறதா இல்லையா?

2. பிரிட்டனிலுள்ள சீன தேசிய சர்க்காரின் ஆஸ்திகள்மீது செஞ்சீனுவுக்குள்ள உரிமையை பிரிட்டன் ஏற்கிறதா இல்லையா?

செஞ்சீனு ஐ.நா.வில் மெம்பராவதைப் பிரிட்டன் அங்கீகரிப்பதாகவே வைத்துக்கொண்டாலும் இன்னும் இரு நாடுகளின் வோட்டு தேவையாக இருக்கிறது. இப்பொழுது ஐ.நா தலைவராக எகிப்து பிரதிநிதி இருக்கிறார். செஞ்சீனுவை ஆதரிக்க எகிப்தும் தயாராக இல்லை.

அழகை அடைய யோகப்பயிற்சி

லண்டன், ஏப். 13—

யோகப்பயிற்சி மூலம் மிக அழகான உருவத்தைப்பெற முடியும் என்ற இரகசியத்தை அமெரிக்க மாதர்கள் உணர்ந்திருக்கின்றனர் என்றும், ஆயிரக்கணக்கான யு.எஸ். பெண்கள் இப்பயிற்சி செய்ய ஆரம்பித்திருக்கின்றனர் என்றும், ஆனல் இதற்கு அதிகம் செலவிட வேண்டியிருக்கிறதென்றும் லண்டன் டெய்லி மிரர்' நியூயார்க் செய்தி ஒன்றை பிரசுரித்திருக்கிறது.

20 வருஷ காலமாக யோகபயிற்சிகளில் ஈடுபட்ட மிஸ் ஜாக்ஸ்லோன் பெண்கள் சுந்தர வடிவைப் பெற 20 யோகப்பயிற்சிகளை செய்தால் போதும் என்று கூறுகிறார்.

இவரிடம் இப்பயிற்சிகளைக் கற்க வேண்டுமானல் ரூ 228 காணிக்கை செலுத்த வேண்டுமாம். உரிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவைகள்தானும் இவை.

பாக். இலங்கையுடன் இராக் வர்த்தக உடன்படிக்கை

பாக்தாத், ஏப். 12—

இந்தியாவுடன் செய்துகொண்ட வர்த்தக உடன்படிக்கையை இராக் பார்லிமெண்ட் அங்கீகரித்தும், இலங்கை—பாகிஸ்தான் சர்க்கார்களுடன் இராக் வர்த்தக உடன்படிக்கையைச் செய்துகொள்ளும் என்று இராக் மந்திரி டாக்டர் நிஸாஜாபர் கூறினர்.

கலைவாணருக்குப் பாராட்டு

ஒத்தமங்கலம், ஏப். 4—

2—4—50 அன்று கலைவாணர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் உதவியில் சக்தி விஜய இந்து பெண்கள் உயர்தரப் பாடசாலையின் உதவி நிதிக்காக "இறந்த காதல்" என்ற நாடகம் நடத்தித் தந்தார். அதுபோது திராவிட முன்னேற்றக் கழக சார்பாக ஓர் வரவேற்பு இதழ் வாசித்துத் தந்து, மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது.

தபால் இலாகாவில் 852 பேர் விலக்கப்பட்டனர்

புதுடில்லி, ஏப். 12—

1949 பிப்ரவரி 1-ந்தேதி முதல் 1950 ஜனவரி 31-ந் தேதி வரை இந்திய தபால், தந்தி இலாகாவில் 852 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர். என்று தபால் போக்குவரத்து உதவி அமைச்சர் தோழர் குர்ஷத்லால், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த ஹரிஹரநாத் சாஸ்திரியிடம் தெரிவித்தார்.

மாண்டவன் மீண்டான்!

வேலை — வில்லவன்

“மாண்டவன் மீண்டான்” என்ற தலைப்பைக்கண்டவுடன் “ஆண்டவன் அருளலா, அல்லது அறிஞரின் அறிவியலொரு ஆராய்ச்சியோ,” என்ற ஐயம் எழும் அன்பர்களுக்கு! “இரண்டாவதுமல்ல!” என்பது என் பதில் “பிறகு எங்ஙனம்?” என்று தானே கேட்கிறீர்கள், இதோ கூறுகிறேன்.

அவன் ஒரு பகுத்தறிவுவாதி பகுத்தறிவைப் பரப்பவந்தவன். பழமையையும், பக்தியின் பைத்தியத்தையும் பறந்தோடச்செய்து, விஞ்ஞானத்தை வரவேற்று, வைதீகத்தை விரட்டி, சாதி சமயங்களுக்குச் சாவு மணி அடித்து; நாட்டிலே சமத்துவத்தை நிலைச்செய்து — மக்களிடையே மறுமலர்ச்சியினை மிளிரச்செய்து, மனிதனை மனிதனாக வாழச் செய்யவேண்டும், என்பன போன்ற சிறந்த கொள்கைகளைக் கொண்டவன்.

பழமையைப் பேணிக்கொண்டு, பக்திப்பரவசத்திலே மூழ்கிக்கிடந்த, அவன் பெற்றோருக்குத் தன் ‘தன் மானமேன்மையையும், பழமையையும், மதிப்பதை பரிகசிப்பதைப் பார்க்க சகிக்கவில்லை! வியப்படைந்தார்கள், வேதனையடைந்தார்கள்! வெறுப்படைந்தார்கள்! ஆனால் வெட்கப்பட்டார்களில்லை! விழிப்படைந்தார்களில்லை!

“கடவுளிடம் குற்றம் கண்டுபிடித்தால் உன் கண் அவிந்துவிடும்” என்று கடிந்துரைத்தார், கடவுள் பக்தராகவிருக்கும்போதே கண்ணூற நோட்டமிட்டுக் கொண்டிருந்த அவன் தகப்பனார்!

“குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பே!” என்று கதறிக் கண்ணீர் வடித்தார்கள் “ஒன்றே குலம், ஒருவனே தேவன்,” என்பன போன்ற பண்டைத் தமிழனின் குலத்தை கெடுத்துக்கொண்டிருந்த அவன் உறவினரும், மற்றோரும்! அவன் போக்கைமாற்றப் பல முயற்சிகளெடுத்தார்கள்! பயனில்லை! பகுத்தறிவுக்கொள்கைகளை விட்டொழிக்கச் சொல்லி பணித்தார்கள்! பணிந்தானில்லை. வைதார்கள்! உமிழ்ந்தார்கள்! வீட்டைவிட்டே விரட்டினார்கள்! வெற்றி கண்டார்களில்லை! அவன் உணர்ச்சி வேகம் உச்சநிலையடைந்ததே தவிர வீணாகவில்லை!

பெற்றோரின் புறக்கணிப்பையும், ஊராரின் வசைச்சொற்களை வாழ்த்துக்களையும் பொறுக்க முடியாது, அவ்வூரை விட்டு கால்நடையாகவே பிரயாணப்பட்டான் ஒரு பட்டணத்தை நோக்கி! அவன் உள்ளக்கடலிலே எண்ண அலைகள்மோதின அவை தற்கொலை செய்யத் தூண்டவில்லை அவனை! போக்கை மாற்றிக்கொண்டு பக்தனாக மாறவும் தூண்டவில்லை! பழமை பேணிகளான தன் பெற்றோருக்கும், வைதீக விருதுகளான தன் ஊராருக்கும், புத்திகற்பிக்க வழிதேடச்செய்தன!

* * *

நாட்கள்—வாரங்கள்—மாதங்கள் உருண்டோடின! ஆறு மாதங்கள்! அவனைப் பற்றிய தகவலே கிடையாது! அவன் பெற்றோர் அவனைத் தேடிப் பிடிக்க ஆள் அனுப்பினார்களில்லை! ஆண்டவனை வேண்டிக் கொண்டார்கள்! ஜோதிடரிடம் சொன்னார்கள்: “குறி” கூறும்படி வேண்டிக்கேட்டார்கள்.

“கிழக்கே சென்றான், கடவுளைக் கண்டவாறு தூற்றி, காதுடைந்து இறந்தான்,” என்று கூறினார்கள் ஜோதிடரும், ‘குறி’ கூறுவோரும்!

‘தெய்வத்தைத் தூற்றின துரோகி தொலைந்தான், ஆண்டவனை ஏசின அக்கிரமக்காரன் அழிந்தான்; வைதீகத்தை வைதவன் ஒழிந்தான்!” என்ற வார்த்தைகள் உலவலாயின அவ்வூரின் குளக்கரையிலே! குப்பை மேட்டிலே! அம்பலத் திண்ணையிலே! அங்கே! மற்றும் பல இடங்களிலே!

“டேய்!......ஹூம்......... அவன் செத்து ஆறு மாதங்களாவுது......இன்னும் என்னடா காரியம்......கருமாதி.......சீக்கிரம் செய்யணும்!......டேய்!......இன்னும் ரெண்டு நாளிலே வேர்கா மற்றானு, இந்த ஊரிலே...... வைக்கணும்......... வாகைமுழிச்சு வேண்டா!..........டேய்...........ஹூம்..........”

இது என்ன மனிதன் பேச்சு, கலைமகேசுவரியின் முழக்கமா என்று கேட்கிறீர்களா? இல்லை, பேய்—இல்லை—தெய்வம் மனித உடலில் நுழைந்து பேசும் சொற்கள்! அவன் உறவினரான ஒரு அம்மையார் மீது தெய்வம் இறங்கி, மேற்கண்டவாறு முழக்கமிட்டது! அதற்கு இணங்க அவன் பெற்றோர் காரியம்........கருமாதி........யாவற்றையும், ஒழுங்காகச் செய்தார்கள்!

* * *

ஏறத்தாழ ஒரு மாதம் கழிந்தது. இரவு பத்து மணியிருக்கும் அமாவாசை இருட்டு! அடைத்துவிட்டிருந்த கதவைத் தட்டும் சத்தம்! உள்ளேயிருந்தவர்கள் ஆச்சரியத்தோடு, அச்சத்தோடும், கதவைத் திறந்தார்கள். அலறினார்கள், ‘ஐயோ ஆவி!’ என்று! ஆம் அது அவன்தான்!

“அரவணைப்பார்கள், அன்போடு,” என்று எண்ணிவந்த அவன் ஏமாந்துபோனான். உண்மை உருவத்திற்கும், ஆவிக்கும் வேற்றுமை அறியாத தன் பெற்றோரையும், உறவினரையும் வைதான்! ஒரே இரைச்சல்! ஊர் திரண்டுவந்தது! உண்மையை அறிந்தது! “மாண்டான்” என்று முடிவு கட்டப்பட்டவன், மீண்டும் முளைத்துக் கொண்டதைக் கண்டு மிரண்டது! மானத்தைக் காக்க மார்க்கம் தேடினது!

“மேற்கே சென்று மேன்மையாக, உத்தியோகஞ்செய்து திரும்பின என்னை, கிழக்கே சென்று, கடவுளைக் கண்டவாறு தூற்றி, காதுடைந்து காலமானான் என்று கூறிய ஜோதிடம் உண்மைக்கு ஒத்ததா? உலகிற்கு வேண்டியதா?” என்றும்,

“உயிரோடிருக்கும் என்னை மாண்டுபோனான் என்று முழக்கமிட்டுக் கூறி, கருமாதி வைக்கச் சொன்ன தெய்வம் தொழத் தகுதியுடையதா? அறிவிற்கு உகந்ததா?” என்றும்,

ஊரை ஏமாற்றி வயிற்றை வளர்க்கும் ஜோதிடர்களைப் போற்றிக்கொண்டு, உலகிற்கு வேண்டாத—அறிவிற்கு அப்பாற்பட்ட — பகுத்தறிவுக்கும் புறம்பான தெய்வங்களைத் தொழுகின்ற நீங்கள் மனிதர்களா? அல்லது மாமிசப் பிண்டங்களா?” என்றும் அவன் கேட்கிறான்!!

அன்று அவன்மீது உமிழ்ந்த ஊரைவிட்டு விரட்டிய வைதீகரும்பல் பதில்கூற வாய்த்திருக்கவில்லை! வீரமுழக்கமிட்ட விபூதியும், உருத்திராட்சமும் ஒளிந்து கொண்டது! பக்திமான்கள் பதுங்கிக் கொண்டார்கள்! ஜோதிடம் சொன்னவர் மெள்ள நழுவினார்! ‘குறி’ கூறினவர் மூட்டை கட்டிக்கொண்டு கம்பி நீட்டினார்!

“மாண்டவன் மீண்டான்!” “செத்தவன் பிழைத்தான்!” “ஜோதிடம் பொய்யானது,” என்னும் சொற்கள் உலவலாயின!

“மாண்டான்” என்று முடிவு கட்டப்பட்ட அவன், மீண்டும் மக்களிடையே முளைத்தான்.

மடமையிலே மூழ்கி, மனிதத் தன்மையையிழந்து — மாண்டு மாமிசப் பிண்டங்களாக வாழ்ந்துவந்த அவ்வூர் மக்கள் பலர் மீண்டும் பிழைத்தார்கள்! வைதிகத்தை உதறித்தள்ளி, ஆரிய அரவணைப்பிலிருந்து அகன்று உயிர் பெற்றார்கள்! ஊர் செழித்தது—உலகத்தோடொட்ட ஒழுக! விளைந்தார்கள்

பகுத்தறிவு பயனளித்தது !!

அதிகாரிகளுக்குப் பரீட்சை

இலங்கை சர்க்கார் முடிவு

தனிப்பட்ட இலாக்காக்கள் தங்களுடைய அதிகாரிகளை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கென தனியாக பரீட்சைகள் நடத்துவதை அனுமதிப்பதற்குப் பதிலாக எல்லா அரசாங்க இலாக்காக்களிலும் நியமிப்பதற்கென ஒரு மத்திய ஊழியர்கள் பரீட்சையை நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதுவரை பொதுவகையான குமாஸ்தாக்கள் பரீட்சை, தபால் குமாஸ்தாக்கள், நில அளவை குமாஸ்தாக்கள், சுங்க இலாகா குமாஸ்தாக்கள் முதலியோருடையவும், தமது தந்தி முறையை கற்றுக்கொள்பவர்களின் பரீட்சை, ஸ்டேஷன் மாஸ்டர்களின் பரீட்சை போன்ற அநேக பரீட்சைகளை அரசாங்கம் நடத்திவருகின்றது.

இப்பரீட்சைகளுக்குப் பதிலாக இனிமேல் எல்லா இலாக்காக்களிலும் அதிகாரிகளை அமர்த்துவதற்கென்று ஒரு தனிப்பட்ட மத்தியபரீட்சையை நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய கிராமத்தில் தங்க வேட்டை!

சிட்னி, ஏப். 13— ஆஸ்திரேலியாவில் விக்டோரியா ஸ்டேட்டிலுள்ள வெட்டர்பர்ன் என்ற கிராமத்தில், சென்ற மாதம் [illegible]ருக்குத் தெருவிலும் வீட்டுப் புழக்கடையிலும் தோண்டிய போது தங்கம் அகப்பட்டது. இப்பொழுது மேலும் சிலருக்குத் தங்கம் அகப்பட ஆரம்பித்திருக்கிறது. இதிலிருந்து அக்கிராமத்திலுள்ள மக்கள் தங்கள் வீட்டின் கொல்லைகள், தெருக்கள் எங்குபார்த்தாலும் தோண்ட ஆரம்பித்துவிட்டனர். சுமார் 200 பேர் இந்த வேலையில் தினமும், ஈடுபட்டிருக்கின்றனராம்.

“நச்சுப் பூச்சி”

—: (சு. பரமசிவன்) :—

தலைவரெல்லாம் தானேயாய் தலைகீழாய் நின்றிடுவர்
தற்பெருமை கொண்டிங்கே தலைகொழுத்தே ஆடிடுவர்
உள்ளொன்று வைத்திட்டுப் புறமொன்று பேசியே
உன்னுயிரும் என்னுயிரும் சமமென்று சொல்லிடுவர்
படிப்பனை பல செய்து பகட்டாக நடந்திட்டே
பலரிடை பகைகொள்வர் பயங்கொள்ளி மனிதரிவர்
அர்த்தமற்ற இவ்வினத்தார் ஆகாது பல செய்வர்
அடுக்காது என்றுரைத்தால் அநியாய ஆட்சி செய்வர்
இந்திய நாட்டிலே இவரெல்லாம் இருந்து மிக
இன்னல் பல விளைக்கின்றார் இனிய தமிழ் நாட்டிடையே
குள்ளநரி கூட்டத்தார் கும்மாளம் போடுகிறார்
குனிந்தவர் பிடர்தனிலே குதிரை ஏற்றம் பயில்கின்றார்
வெட்டிப் புகழுடையும் வீணர்களாய் வாழ்கின்றார்
பட்டம் பதவியற்கு பல்லிளித்தே வாய்பிளப்பர்
பாரில் இவரெல்லாம் பகைக்கூட்டம் எந்நாளும்
நச்சுப் பூச்சுயவர் நசித்திடு நாள் எந்நாளோ

தி. மு. கழக பொதுக்கூட்டம்

வேலூர் (சேலம்)

வேலூர், ஏப். 9— திராவிடமுன்னேற்றக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், 6—4—50 அன்று மாலை தோழர் வி.ஏ. ராமநாதன் அவர்கள்தலைமையில்நடந்தது தோழர்கள் என். வி. நடராசன், டி. பி. மூர்த்தி ஆகியோர் விரிவாக தற்கால அரசியல் பொருளாதார, சமுதாயத்தைப் பற்றியும், மூடப்பழக்கவழக்கத்தைப் பற்றியும் வெகுவிரிவாகப்பேசினார்கள் செயலாளர் தோழர் வி.ஏ. இலக்குமணன் அவர்கள் நன்றிகூறுதலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

புகளூர்

புகளூர், ஏப். 3— தி. மு. க. துவக்க விழா, 27—3—50 அன்று மாலை தோழர் டி. பி. மூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது தோழர் டி. பாலகிருஷ்ணன் காட்டுக்கேன் இசைத்தார். தலைவர் முகவுரையாக கழக இலட்சியம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய நோக்கம் அது தோன்றியவிதம், இனி ஆற்ற வேண்டிய பணி ஆகியவை குறித்து மிக அழகாக விளக்கமாகப் பேசியபின்’ நன்றி கூற விழா இனிது முடிவுற்றது

வாட்டாகுடி

வாட்டாகுடி, ஏப். 2— 31—3—50 அன்று திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா, தோழர் கே. முகம்மதலி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள். கே. ஏ. திராவிடமணி, முருகேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் நடராசன் அவர்கள் தேசம் போர, தி. மு. கழகத்தின் நோக்கம் பதவிக்காக அல்ல, ஆட்சியைக் கைபற்றிக் கொள்ள வேண்டுமென்பதுமல்ல. சீழ்பிடித்துள்ள சமுதாயத்தைச்சீர்படுத்தி தீண்டாமை ஒழித்து, மக்களை நல்வாழ்வு வாழ வழி செய்வதே எங்கள் குறிக்கோள் என்று சுமார் 2-மணி நேரம் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். தலைவர் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

பரமத்தி

பரமத்தி, ஏப். 1— 29—3—50 அன்று மாலை தி. மு. க. துவக்கவிழா நடைபெற்றது. கூட்ட துவக்கத்தில் தோழர் பி. எஸ். சின்னப்பா ஐடையின் முன்புறம் ரேடியோ மைதானத்தில் தி. மு. க. லட்சியக் கொடியை தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள்ஏற்றிவைத்தார். கூட்டத்திற்குத்தோழர் பி. நல்லமுத்து அவர்கள் தலைமை வகித்து, முன்னுரை ஆற்றிய பின், தோழர் ராமசாமி பேசினார். அடுத்தத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் அரசியல் சமுதாய, பொருளாதார ஆகிய துறையிலே நம் அடிமை நிலை குறித்தும் இதிலிருந்து மீள வேண்டுமானால் ‘திராவிட நாடு’ திராவிடர்க்கு ஆகவேண்டுமென்றும் சொற்பொழிவாற்றினர். முடிவாகத்தோழர் பி அங்கமுத்து அவர்கள் காங்கிரஸ் நிலைகுறித்து சொற்பொழிவாற்றியபின், தலைவர் முடிவுரைக்குப் பின், செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

சன்னசிநல்லூர்

சன்னசிநல்லூர், ஏப். 10— திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா 7—4—50 அன்று மாலை தோழர் தமிழரசன் அவர்கள் தலைமையில் மிக சிறந்த முறையில் நடைபெற்றது. தலைவர் தம் முகவுரையில் தி. மு. கழக கொள்கைகளைப் பற்றி மிக விரிவாக எடுத்துக் கூறினார்.

பின் தோழர் ஏ. பி தர்மலிங்கம் நாட்டிலுள்ள ஊழல்களை எடுத்துக் கூறினார். முடிவாகத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் புராண இதிகாசங்களிலுள்ள புளுத்துப்போன கொள்கைகளையும், ஒற்றுமையின் பெருமைகளையும், அதை உபயோகப்படுத்த வேண்டிய முறையையும், தி. மு. க. வில் சேர வேண்டிய அவசியம் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். தோழர்செஞ்செயல் நன்றி கூறலுடன், கூட்டம் இனிது கலைந்தது.

இந்துமதத்தில் பெண்ணுரிமைக்கு இடமில்லை

பெண்ணுரிமையைத்தடுக்க ஆண்களுக்கு உரிமை ஏது?

பெண்ணுலகம் வாழ சொத்துரிமை தேவை

பெண்கள் மாநாட்டில் வெற்றிச் செல்வி அன்பழகன்

(நேற்றைய தொடர்ச்சி)

நமக்கென, ஒரு தனி நாடு அமைத்துக் கொள்ள, ஒரு ஆட்சி ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருந்திருக்குமானால், நமக்கென குறள் நெறியை அடிப்படையாகக் கொண்டு ஒரு சமூகச் சட்டத்தை அமைத்துக்கொண்டிருக்கலாம். இலங்கையில் தேசவளமைச் சட்டம் இயல்பான சமூகச்சட்டமாக அமைந்துள்ளதுபோல், இன்றும் தமிழ் வளமைச் சட்டம் சமூகச் சட்டமாக அமையும் நாள் அதிகதூரத்தில் இல்லை, நமது முயற்சி மேலும் மேலும் வளருமானால்.

இந்நிலையில் இன்று கொண்டுவரப்படும் மசோதாவோ, பெண்களுக்கு மிகச்சில அடிப்படை உரிமைகளைத்தான் தருவதாக உள்ளது.

அவையாவன :— (1) பலதார மணத்தடை செய்தல் (ஏகதார மணமே செல்லுபடியாகும்.) (2) திருமண விலக்குரிமை அளித்தல். (3) பெண்களுக்குச் சொத்துரிமை அளித்தல். இவையே இம்மசோதாவின் முக்கியத் திட்டங்களாகும்.

பலதார மணமே பாழ்படுத்தியது......

உண்மையில் ஆரியர் கலாசாரத் தொடர்பாலேயே, காதல் வாழ்வு சிறந்த நம் நாட்டிலும் பலதார மணத்திற்கும் சிறப்பு ஏற்பட்டுவிட்டது. தசரதனுக்கும் பத்தினிகள், பட்டத்தரசிகள் மூவர் பஞ்சணை அரசிகள் அறுபதினாயிரம் எனவும், வில்வீரன் விஜயனுக்கு நாட்டுக்கு ஒரு மனைவி எனவும் முரளிதரனுக்கோ, ருக்மணி, பாமா, மட்டுமன்றி கோபிகள் எல்லாம் கூட விளையாட்டுத் துணைவிகள் எனவும், பாஞ்சாலி திரௌபதைக்கோ கைபிடித்த கணவன் ஒருவன், கடமைக்கு உரிய கணவரோ ஐவர், காதலோ ஆறுமவனிடம் சென்றது எனவும், பெருமையோடு பேசப்பட்ட காரணத்தாலேயே இவ்விழிநிலை வளர்ந்தது. ஆணுக்கு ஒரு பெண்—அதுவே நீதிமுறை, இயல்பு. மாறாக பலதார மணத்தால் குடும்பத்தில் கோளாறும், வேற்றுமையும், சண்டை சச்சரவுமே வளரலாயின. பாமா, ருக்மணி சண்டையும், கைகேயி-தசரதன் தகராறுமே கூட இதன் விளைவுகள் இரண்டு நிகழ்ச்சியிலும், இரண்டு அவதாரங்களே சம்பந்தப்பட்டுள்ளன. ஆனால் சண்டை பலனோ தோல்விதான்.

இந்தப் பலதார மணந்தான் தமிழ்ச் சமூகத்தின் அடிப்படையான குடும்ப வாழ்வைக் குலையச் செய்தது. மேலும் ஆண்களின் ஆசைக்கு அடிமைகளே பெண்கள் என்பதை நிலைநாட்ட இப்பல தார மணம் காரணமாகிறது. இந்நிலை இனியும் நீடிப்பது கூடாது, தகாது என்பதால்தான் பல தார மணத்தடையையும், ஏக தார மணத்திற்கே வழி செய்யப்படுவதையும் வரவேற்கிறோம்.

இந்து மதத்தில் பெண் உரிமைக்கு இடமில்லை

மேலும் இந்துமத ஐதீகப்படி மணவிலக்கு அனுமதிக்கப்படுவதில்லை. தவறான முறையிலே வேண்டுமானால் நடந்து தகராறுகளை வளர்த்துக்கொள்ளலாமே யன்றி, ஒழுங்கான முறையில் விலகிக்கொள்ளவோ, பின்னர் வேறு மணம் செய்துகொள்ளவோ இடமில்லை. கணவன் குஷ்டரோகியனாலுமே, காசம் பிடித்தவனோ, முடவனோ, மூட்டாளோ, எப்படி இருந்தாலும், விலகிக்கொள்வதைப் பற்றி எண்ணவும் மனைவிக்கு உரிமையில்லை. ஆடவர்களோ, பலதாரமண முறையாலும், சொத்துடையவர்கள் என்ற முறையில் பெற்றுள்ள ஆதிக்கத்தாலும், வேண்டாத மனைவியை வேதனைக்குள்ளாக்கி சித்திரவதை செய்துவிட்டு, வேறு மணம் செய்துகொள்ளவும் வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால் பெண்டிரோ, எதிர்த்துப்பேசவும் உரிமை பற்று வலுமையாகின்றனர்.

ஆணுக்கேது உரிமை!

மனத் திருப்தியற்ற நிலையில், அமரக் கடலில் மூழ்கும் தோழியர்களுக்குக் கிடைக்கும் விடுதலையே திருமண விலக்குரிமையாம். இது சனாதன தர்மத்திற்கு விரோதம், என்று சழக்கரே உரைப்பர்.

தேவதாசிகளாகப் பொட்டுக் கட்டிக்கொள்ள இடமளித்து வந்ததோடு, அத்தகைய விபசார வெட்கக்கேட்டை விலக்க, தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்தபோது, அதை எதிர்க்கவும் காரணமாக இருந்த இந்த தர்மத்தின் பெயரால் — மணவிலக்குரிமையை எதிர்ப்பது மனக்கேடேயாகும்.

மேலும் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைத் தடுக்க ஆண்களுக்கு ஏது உரிமை? அடிமைக்கு உரிமை ஏற்றதல்ல என்று எஜமான் உபதேசிப்பதையே ஒக்கும் அது. அப்படித் தடுப்பது—எளியவர் உணவை, வலியவர் பறித்திடும் அநீதியேயாகும்.

இன்றோ, ஜாதகம் பார்த்து, ஆரூடம் பார்த்து, சகுனம்பார்த்து, சாதி பார்த்து, சொத்து பார்த்து, இறுதியில் காணப்படும் பொருத்தத்தால் நடைபெறும் திருமணங்கள் பலவும், மணமக்களுள் பொருத்தமின்மையால் துயரத்தில் முடிகின்றன. வற்புறுத்தலால் நடைபெறும் வயதுப் பொருத்தமற்ற - கிழவர் - குமரிகள் திருமணங்கள் பல. எனவேதான், பெண்களின் துயர்நீக்க மீட்க திருமண விலக்கு உரிமை இன்றியமையாததாகின்றது.

அதுதான்போல் கூறப்படும் சொத்துரிமை இருந்தாலொழிய - திருமண விலக்குரிமையும் பயனற்றதாகும். இன்றைய சமூகத்தில் ஆண்களுக்கே, சொத்து, சுதந்திரம், வீடுவாசல், கன்று கழனி, செல்வம் எல்லாம் உரியன. பெண்களே கூட ஆண்களின் சொத்துக்கள்தான். அதனால் அதற்கேற்றபடி எனப் படும்போதும் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்று பெண்களையும் மூவாசைப் பொருள்களில் சேர்த்துத்தான் குறிப்பிடுகின்றனர். உணர்வற்ற மண்ணும் பொன்னும் போலத்தான், உயிரும் உணர்வும் பெற்றுள்ள பெண்ணும் கருதப்படுகின்றாள். இந்த நிலைமை மாறவேண்டுமானால், தனித்தன்மையோடு தாம் விருப்பப்படி வாழும் வன்மை பெண்களுக்கு ஏற்பட்டாகவேண்டும்.

பெண் உரிமை வேண்டும்!

அந்த வன்மை பெண் கல்வியால் ஓரளவு ஏற்படும் எனினும், இன்னும் படித்த பெண்கள் பலரும் நல்ல அடிமைகளாக இருப்பதையே மதிப்பாகக் கொண்டுள்ளதைக் காணும்போது, படித்தால் மட்டும் பயனில்லை என்பது தெளிவாகிறது. எனவேதான், பெண்ணுரிமை மலரச் சொத்துரிமை அவசியமாகிறது. இன்றோ பெண்கள் கைகள் பூட்டியவைக்கும் நிலையாக, பட்டுச் சேலைகள் சத்திரங்கள் பதுமைகளாக வைக்கப்பட்டுள்ளனர். அந்தப் பொருள்களே அவர்களின் ஆஸ்தி. ஆனால் அவற்றை மாற்றவோ, விற்கவோகூட அவர்களுக்கு உரிமை இல்லை. மேலும் சொத்துரிமை இன்மையினாலேயே பொருளின் மதிப்பைச் சரியாக அறியாமல், கண்மூடித்தனமான பழக்கங்கட்கு இரையாகின்றனர். எதற்கெடுத்தாலும்பிறரை எதிர்பார்த்து வாழ்வதால் அடிமை மனப்பான்மையையும் வளர்த்துக் கொள்கின்றனர். சொத்துரிமை கிடைத்தால் அவர்களின் தாழ்வு நீங்கும், அடிமைத்தனம் அகலும்.

இவ்வுரிமையை ஆடவர்களில் சிலர் மதுப்பது சுயநலத்தினாலேயேயாகும். ஒரு தாய்தந்தையரிடம் பிறந்த மக்களுள், ஆணுக்கு வெண்ணையும், பெண்ணுக்கு சுண்ணாம்பும் தருவது எப்படி நீதியாகும்? இதனால் குடும்ப வாழ்வோ, சொத்தோ அழிந்துவிடும் என்பதும் அர்த்தமற்ற பேச்சேயாகும். பெண்ணும் ஆணைப்போல் சொத்துரிமை பெற்றுவிட்டால் கணவன் மனைவி வாழ்வு சமத்துவ அன்பு வாழ்வாக மலரும். தம் மக்களையும் பேதமின்றி, ஒப்புரிமையோடு கல்வி நலத்தோடு வளர்க்க முற்படுவர்.

இன்றுபோல், "அடுப்பூதுவதே மாதர் கடமை, அதுகளை உண்டாக்கத் தெரிந்தால் போதாதோ? காலேஜ் படிப்புக்கூடவா ஒரு கேடு?, என்ற பேச்சுகளுக்கும் இடமிருக்காது.

அந்த நாளில் சொத்துரிமை இருந்ததோ பெண்களுக்கு? என்றும், அவர்களெல்லாம் வாழவில்லையா? என்றும் கேட்கின்றனர் சிலர்.

அன்று அப்படி இன்று......

அந்த நாளில் கூட்டுக்குடும்ப முறையும் (பிரிவினையாகாத குடும்பம்) இயல்பாகத்தான் இருந்தது. இந்நாளில் அண்ணன் அதிகாரம் செலுத்துவதும், தம்பி அடங்கி ஒடுங்கி நடப்பதும், இயலாத இயல்பாகிவிடவே, அம்முறை-குறைகள் நிறைந்ததாகிவிட்டது. இன்றோ வாழ்க்கைத் துறைகள் பலவாகி, பொருள் ஈட்டும் முறையும் பெருகி அவரவர் தனித்தனி விருப்பு வெறுப்புகளும் வளர்ந்து, குடியாட்சி, தனி உரிமை உணர்ச்சி பெருகியு ள்ளமையால், கூட்டுக் குடும்ப முறையே நிலைக்க முடியாததாகிவிட்டது. அந்த முறையைத் திருத்தியும் ஒரு திட்டத்தை இம்மசோதாவில் இணைத்துள்ளனர். அதனையும் நாம் வரவேற்கிறோம்.

அத்தகு கூட்டுக் குடும்பத்தில் நிலவிய ஒற்றுமைமைவிட, வலிவான ஒற்றுமையே கணவன் மனைவிகளிடையில் நிலவினாலும், பெண் மணவிலக்குச் செய்துகொள்ள நேரினால் அந்நிலையில் சொத்துரிமை இல்லையெனில், கணவனுக்கு அடிமையாக இருப்பதைத் தவிர வேறு வழி இல்லாது போகிறது.

மேலும் அந்த நாளில் வாழ்க்கை வசதிகள் மலிந்த காரணத்தாலும், காதல் மணம் தழைத்திருந்தமையாலும் சொத்துரிமை தேவைப்படவில்லை. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு என்ற தொடு தேவைகள் அடங்கி, எல்லோருமே உழுதும், உழைத்தும் வாழ்க்கை நடத்திவந்ததால், பெண்கள் சொத்துரிமையைப்பற்றிக் கவலைப்படத்தேவை இருந்ததில்லை. ஆனால் இன்றோ தமிழகத்தின் பண்பாடே திரிந்தும், காலத்தின் வேகத்தால் சமூக அமைப்பு மாறியும் உள்ளதால் பெண்களுக்குச் சொத்துரிமை அவசியமாகிறது.

ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமாக வாழ வேண்டுமெனில்—நாட்டின், சமூக முன்னேற்றத்தில் தக்க பங்குகொள்ள வேண்டுமெனில், பெண்களுக்குச் சொத்துரிமை அவசியமாகும். விபசாரம், கள்ளநட்பு, தீய நடவடிக்கை, கமக்ரோதம் இவை ஒழிய வேண்டுமெனில், இந்த இந்துச் சட்டத் திருத்த மசோதா எந்த விதமான ஏமாற்றத்துக்கும் இடந்தராமல், தேயாமல், குறையாமல் சட்டத்தில் சந்துபொந்துகட்கு இடமில்லாமல் லவதீசர்களைத் திருப்தி செய்ய முனையாமல், இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளபடியே நிறைவேற்றப்பட்டாக வேண்டும்.

புரட்சியானதல்ல—ஆனாலும்?

இந்த மசோதா—புரட்சிகரமானதல்ல எனினும். இதை நிறைவேற்றாமல் தடுக்க சூழ்ச்சி நடைபெறுகிறது. நல்லறிவாளர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கப்படவில்லை. உண்மையில் இம்மசோதா இன்னும் தீவிரமான வடிவில் வெளிவந்திருக்கவேண்டும். ஆடவர்கள் மணம் செய்துகொள்வதற்குரிய மேல் வயது எல்லை குறிப்பிடும், மனைவியை இழந்தவர்கள் விதவைகளையே மணக்கவேண்டும் என்னும் திட்டங்கள் இம்மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். அதுகூடாவிடினும் இந்த அளவாவது, இப்படியே இம்மசோதாவை நிறைவேற்றும் துணிவு அரசாங்கத்திற்கு ஏற்படவேண்டும். இல்லையெனில் தாய்மார்களின் வெறுப்புக்கு, ஆட்சிப்பீடமேறியோர் ஆளாக நேரிடும் என்பதையும் கவனப்படுத்துகிறேன்.

இங்கு, திராவிடப் பெண்களாகிய நாம் மட்டுமே கூடியுள்ளோமெனினும், பார்ப்பனப் பெண்களும், பிறரும் உரிமை வேட்கையோடு, இதனை ஆதரிக்க முன்வருவது அவர்கள் கடமையாகும்.

நம்மைப்பொருத்தவரையில் ஆடவர்களையே எதற்கும் எதிர்பாராமல், நாமே முனைந்து உரிமைபெற முயலவேண்டும். 'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீருவதற்கில்லை'— என்ற புரட்சிக் கவிஞரின் உரையைக் கருத்தில் கொண்டு, நம் இனம் விடுதலை பெற, திராவிடநாடு திராவிடருக்காக, பெண்ணடிமை நீங்க, பகுத்தறிவுப்பாதையில், திராவிடமுன்னேற்றக் கழகச் சார்பில் பணியாற்ற உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது, உரையை இதுகாறும் கேட்டிருந்த உங்கள் யாவர்க்கும் என் நன்றியைத் தெரிவித்து, இம்மாநாட்டைத் திறந்து வைக்கிறேன். வணக்கம்.

வாழ்க திராவிடம்! ஓங்குக பெண்ணுரிமை!

❖ கட்டிடம்! ❖

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்கிறீர்கள்!

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா என்கிறீர்கள்!

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்கிறீர்கள்!

தலைமைக் காரியாலயம்! உடனே அமைத்தாலொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெறாது என்று அன்பு வருவும் கூறினீர்கள்!

தலைமைநிலையக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

குறைபட்ட தோழர்களே!
வற்புறுத்திய நண்பர்களே!
ஆர்வம்காட்டிய அன்பர்களே!
யோசனை கூறிய தோழர்களே!

அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா?

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

செவ்வாய்ப்பேட்டை, சேலம்
மவுண்ட்ரோடு—சென்னை
வடகோவை
ஈரோடு
அங்கலக்குறிச்சி
திருச்சேறை
ஆண்டிப்பட்டி
வலவனூர்
திருவல்லிக்கேணி
பெத்நாயக்கன்பேட்டை
சாஸ்பூர்
கள்ளக்குறிச்சி
பேரையூர்
திண்டுக்கல்
வேலூர்—சேலம்

மற்றைய கழகங்கள்

வளவனூர் (திருவள்ளுவர் கழகம்)
சேத்துப்பட்டு (வ. உ. சி. இ. கழகம்)

ரோமில் சர்வதேச வர்த்தக சபை மாநாடு

புதுடில்லி, ஏப். 14—

ரோமில் ஏப்ரல் 23உ முதல் 26உ வரை நடைபெறவிருக்கும் சர்வதேச வர்த்தகசபை மாநாட்டில் இந்தியாவும் கலந்துகொள்கிறது.

சர்வதேச வர்த்தக சபையின் இந்திய தேசீயக் கமிட்டியின் மெம்பர்கள் நால்வர் இதில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் விவரம், ஏ. எம். எம். அருணாசலம் (சென்னை) அலீஸ் லால்ஜி (பம்பாய்) வி. டி. தாக்கர் (கல்கத்தா) காஞ்சன் காலிவாரா (பம்பாய்)

மாயமாக மறைந்த யு. எஸ். விமானம்

கோபன்ஹேகன், ஏப். 14—

பால்டிக்கில் மாயமாக மறைந்த யுனைடெட் ஸ்டேட்ஸ் விமானத்தை தேடும் வேலை இன்னும்தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்விமானத்தில் இருந்தவர்கள் இனி அகப்படலாம் என்ற நம்பிக்கை விடப்பட்டுவிட்டதாக ஒரு அமெரிக்க அதிகாரி கூறினார்.



65 மைல் உயரச் செல்லும் ராக்கெட்டுகள். இந்த ராக்கெட்டுகளுடன் இணைத்து அனுப்பப்படும் இயந்திரங்கள், காஸ்மிக் கதிர்களைப் பற்றிப் பல உண்மைகளை வெளியாக்குகின்றனவாம். ஒரு கப்பல் மேல்தளத்திலிருந்து ராக்கெட்டை அனுப்புவதை படம் காட்டுகிறது.

பிற்போக்குச் சக்தி ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்குமே, அதிக இடம் தரப்படுகிறது இன்றையப்பத்திரிக்கைகளில்! வேறு விஷயங்கள் அவர்களுக்குப் புரியாத காரணத்தால், பிற்போக்குச் சக்திகளைப் பலப்படுத்தவே பெரிய தலைகள் பேராதரவு தருகின்றன.

ஆண்களுக்கு உள்ளது போல் பெண்களுக்கும் உரிமைகள் பெற வேண்டுமென்பதை உலகம் ஒத்துக்கொள்கிறது. பெண் சமூதாயம் வேறு விழிப்படைந்துள்ளது. ஒரு ஆணுக்குஒருகைகுட்டையாக இருந்தால், ஒரு கால் முடமாக இருந்தால், ஒரு கண் பட்டுப்போயிருந்தால் எந்த வேதாந்தி கூறினாலும் அவலட்சணம் என்றுதான் கூறுவர். உயிர்நாடி போன்ற பெண்ணினம் முன்னேறவிடாவிட்டால் சமூதாயம் முன்னேறுமா?

எது பெரிது?

இந்தியாவின்முதல்வெள்ளை கவர்னர்-ஜெனரல்வாரன்ஹேஸ்டிங்ஸ் இந்தியருக்குச் சில சட்ட உரிமைகள் கொடுக்க வேண்டுமென்று யோசித்தபோது "பிராமணர்களை அழைத்தான். இந்தநாட்டின் சம்பிரதாயங்கள என்ன? பழக்கவழக்கங்கள் என்ன? முன் ஆண்ட மன்னர்கள் கடைப்பிடித்த முறை எவ்வாறு? திருமணம் எவ்வாறு நடத்தப்படுகிறது? என்றுகேட்டான, சுக்ரநீதி, பதஞ்சலி சாஸ்திரம், வேத ஆகமவிதிகளை எடுத்து விசினர்கள், பிராமண விற்பன்னர்கள்! ஒருஒரு நீதி மன்றத்திலும் ஒரு பிராமணபண்டிதர் இருப்பார்; அவரைக் கேட்டே ஆங்கில நீதிபதி தீர்ப்பளிக்க வேண்டும்.

இந்த முறை இருந்ததென்பதை மறைத்து விடலாம் அவர்கள். 5 ஆண்டுகளில் ஆனால் இப்பொழுது மறைக்க முடியாது. பிராமணர்கள் கொடுத்த சூத்திரங்களையொட்டிச் சட்டம, தேவையைப்பற்றியல்ல. இதைநான் கூறுவதால் 153 இ. பி. கோ. வின் படி குற்றவாளியாக்கலாம்; ஆனால் நான் பயப்படவில்லை. தோழர் நெல்சன் கூறியுள்ளார்; தோழர் எஸ். சீனிவாச அய்யங்கார் கூறியுள்ளார் தென்னாட்டுக்கு இந்துமதச் சட்டங்கள பொருந்தவிரதென்று. நான் இதை எடுத்துக் கூறுகின்றேனென்று என் மீது ஆட்சியாளருக்குக் கோபம்வரக் கூடும். மக்கள் நன்மை பெரிதா, சர்க்காரின் கோபம் பெரிதா என்பதை எடை போட்டு சர்க்காரின் கோபத்துக்கு ஆளானுலும் பரவாயில்லை என்றுதான் கூறுகிறேன்.

நாட்டு நன்மைபற்றிச் சிறிதும் கவலைப்படாத சாண்டவர்த வெள்ளையர், அண்டிப்பிழைக்க வந்த ஆரியர், துள்ளாக்கி பஞ்சாங்கத்தின் கூட்டு காரணம் விளக்காமல் சட்டம் செய்தது. நாங்கள் ஆட்சிபீடமேறினால் திருத்தியமைக்கமாட்டோம், தூக்கி எறிவோம். இங்கிலாந்தில் கிரேக்க நாட்டில் ரோம் சாம்ராஜ்யத்தில், ஜார் கவிழ்க்கப்பட்ட ரஷியாவில் பதவி கை மாறியபோது சட்டம் தூக்கித்தான் எறியப்பட்டது. சங்கராச்சாரியரே செய்த சட்டத்தைத் தூக்கி எறிவோம். சிறிது மருவாக இருந்தால் அதற்கு வேண்டிய மாற்றம் இருக்கிறது தூக்கி தூ. அதிகாரிகள் நிலை காலத்துக்கு ஏற்றபடி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றால் பிற்போக்கு வாதிகள் எவ்வளவு எதிர்க்கிறார்கள்! நாட்டில் எதிர்ப்பிருக்கிறதென்று கூறுகிறார்கள்.

வேதம் படிக்கும் சோபில் குருக்களும், தர்மகர்த்தாவானதா அர்ச்சகர் வர்கில் தொழில் நடத்துவதா என்று சந்தேகப்படும் வக்கீல்களும் சேர்ந்தும் சாட்சியாவைக்கொண்டு நாட்டில் எதிர்ப்பிருக்கிறதென்று கூறுகின்றனர் சுதந்திர சர்க்கார், நேரு சர்க்கார், காங்கிரஸ் சர்க்கார் பொருட்படுத்தலாமா? எது மோ இன அபிப்பிராயம்? பிற்போக்குப் பத்திரிகைகளுக்கு எவ்வளவு தடை? புத்தகங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன ஜாமீன் தொகை அளவுக்கு மீறிக் கேட்கப்படுகிறது வெட்கமின்றி. சரிகின்ற கட்டடத்தில் வௌவால்போல் தொங்கிக் கொண்டிருக்கிறது காங்கிரஸ் மந்திரிசபை. வெளியில் வந்து விட்டால் ஆபத்தில்லை. இல்லாவிட்டால் பழங்கால முறையில் நம்பிக்கையில்லாதவர்கள் என்று கூறப்படுவார்கள். இந்தியக் குடியரசுத் தலைவராக ஆக்கப்பட்டுள்ள பாபு ராஜேந்திரப்பிரசாத் கூறுகிறார் காங்கிரஸ் அரசாங்கம் இந்த சட்டத் திருத்த மசோதாவைத் திருத்த லாயக்கற்றதென்று. நாங்கள் கூறுகிறோம் காங்கிரஸ் சர்க்கார் மற்றதற்கு லாயக்கில்லையென்று. காங்கிரஸ் சர்க்காரே கொண்டுவந்த மசோதாவை லாயக்கற்றதென்று கூறிக்கொண்டுதலைவராக இருக்க இவர் லாயக்கா? கம்யூனிஸ்டுகளை வேட்டையாடக் காங்கிரஸ் சர்க்காருக்கு லாயக்கா? இறந்துவிட்டான் மனிதன் துப்பாக்கி குண்டுபட்டு; ஆகையால் கம்யூனிஸ்டாகத்தான் இருக்கவேண்டுமென்று கூறுகிறீர்களே அது லாயக்கா?

காங்கிரஸ் தலைவர்களில் பாபு ராஜேந்திர பிரசாத்துக்குத்தான் நான் அதிக மதிப்புத் தந்து வந்தேன். அறிவுடையவர் என்று அவர் முகத்தைக் கண்டால் தெரியாவிட்டாலும் கூட அன்பு மனம் படைத்தவர் என்ற காரணத்தால், விசித்திரமான காரணங்காட்டி எதிர்க்கிறார் காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி. எனக்கென்னவோ மசோதாவைப் பிடிக்கவில்லை; ஆனால் வீட்டுக்குச் சென்றால் என் மனைவி ஆதரிக்கச் சொல்லித் தொல்லைப்படுத்துகிறாள் என்று கூறுகிறார். வேடிக்கையான பிரச்னையா இது?

பாபு ராஜேந்திரப் பிரசாத்தும் பட்டாபி சீதாராமையா

எதிர்க்க, கொட்டிலம் சுற்றுமல் கதர்க் குல்லாய் அணியாமல் மந்திரியாகிவிட்ட டாக்டர் அம்பேத்கார் இந்த சட்டத் திருத்த மசோதா கொண்டுவர காங்கிரஸ் எதிர்க்க, நாங்கள் ஆதரிக்க எவ்வளவு திகைப்பு பொது மக்களுக்குத்தான்!

பலவிதமான எதிர்ப்புகள் மசோதாவுக்கு புது டில்லியில் உயரமான மாடங்களில் ஏறிக்கொண்டு எதிர்ப்பு; மடிகட்டிக் கொத்துக்கொண்டு பண்டித நேருவைப் பாராளுமன்றத்தில் விடமாட்டேன் என்று கூறும் அம்மையார் எதிர்ப்பு.

சேலத்தில் நமது ஏஜெண்டு

இவ்வூருக்கு நமது 'மாலை மணி' ஏஜெண்டாக தோழர் அம்மாபேட்டை கே. குப்புசாமி நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை, நேயர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

3-வது வெற்றிகரமான வாரம்

கோவிந்தன் & கம்பெனியாரின்

மருதநாட்டு இளவரசி

கதை வசனம்	டைரக்ஷன்
மு. கருணாநிதி	A. காசிலிங்கம்

சென்னை	...	சாகர் & சயானி
ஆலந்தூர்	...	விக்டோரியா
மதுரை	...	சந்திரா டாக்கீஸ்
கோயமுத்தூர்	...	ராயல் & டைமண்ட்
திருச்சி	...	கெயிட்டி
தஞ்சாவூர்	...	டவர்
திண்டுகல்	...	முருகன்
தூத்துக்குடி	...	ஜோசப்
தென்காசி	...	பாக்யலக்ஷ்மி
கோட்டயம்	...	சென்ட்ரல்
செங்கோட்டை	...	பத்மநாபன்
அலப்புழை	...	ஸ்ரீகிருஷ்ணு
திருவனந்தபுரம்	...	சித்ரா
பொள்ளாச்சி	...	பகவான்
சிவகாசி	...	மீரா
திருச்சூர்	...	ஜோஸ்
கண்ணனூர்	...	ஜவஹர்
பவானி	...	மோஹன்
பெங்களூர்	...	விஜயா & ஆப்பெரா

கோவிந்தன் & கம்பெனி,
சென்னை - 15

ஆசிரியருக்கு முடங்கல்

இரயில்வே அதிகாரிகள் கவனிப்பார்களா ?

ஈரோடு, தென்னிந்திய ரயில்வே ஸ்டேஷன்களில் ஒரு குறிப்பிட்ட ஜங்ஷன் என்பது யாவரும் அறிந்ததே அங்கு பல அதிகாரிகள், வியாபாரிகள், யாத்திரீகர்கள், பிரயாணம் அதிகமாய் நடைபெற்று வருகிறது. அப்பேர்ப்பட்ட இடத்தில் இந்த ரேஷன் காலத்தில் பிரயாணிகளுக்குப் பல சிற்றுண்டி சாலைகள் திறந்து, அவைகளில் சகல விதசாப்பாட்டு வசதி இருக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம். குறிப்பாக ஈரோடு போன்ற குறிப்பிட்ட ஜங்ஷன்களில் இதை அனுசரித்தேதான் ரயில்வே அதிகாரிகள் சகல வசதியுடன் ஈரோட்டில் ஒரு மரக்கறி சிற்றுண்டிச்சாலையும் மாமிச வகை சிற்றுண்டிச்சாலையும் ஏற்படுத்தி, செவ்வனேபிரயாணிகள் சௌகரியத்திற்குஏற்றவாறு நடத்தி வந்தன. ஆனால் இப்போது மாமிச வகை சிற்றுண்டிச்சாலையில் சாப்பாடு கொடுக்கக்கூடாது என்று உணவளிக்கும் பகுதியில் இருக்கும் அதிகாரிகள் (முழுவதும் பிராமணர்கள்) ஒன்றுகூடி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த ரேஷன் காலத்தில் இப்படிப் பிரயாணிகளுக்கு அசௌகரியம் உண்டாக்கியிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமேயாகும். பிரயாணிகளும் இதனால் கஷ்டப்படுகிறார்கள். காரணம் சில சமயங்களில் வண்டி மாற்றும் பிரயாணிகளுக்கு சிலநிமிஷங்களே உள்ளன. இதற்குள் பிரயாணிகள் தங்கள் பிரயாண அவசரத்தில் ஒரே சிற்றுண்டிச்சாலையில் தங்கள் பசிப்பிணியைத் தணித்துக்கொள்வது சாத்தியமாகாதகாரியம். இவைகளை சிறிதும் முன்பின் ஆலோசியாமல் அதிகாரிகள் இப்படி விதி விதித்திருப்பது நகாத காரியம் என்றுதானே கூறவேண்டியிருக்கிறது. தவிர்த்து இந்த மரக்கறி சிற்றுண்டிசாலையை கம்பெனியாரே நடத்திவருகிறார்கள். அதில் வருடமொன்றுக்கு லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்றும் தெரியவருகிறது. இந்த நஷ்டத்தையும் சகியாது கம்பெனி இச் சிற்றுண்டிச்சாலையை நடத்தி வருகிறது என்றாலும், காரணம் பிரயாணிகளுக்கும் போதுமான சௌகரியம் செய்துகொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கம் தானே? இப்படியிருக்க ஒரு பிராமணரல்லாத ஒரு சிற்றுண்டிச் சாலைக்கு மட்டும் இப்படி உத்தரவு பிறப்பிப்பது ஒரு வேளை தமிழர்களுக்குக் குறிப்பாக ஆத்திரத்தை மூட்டக்கூடிய காரியமாக மாறலாம்.

ஆகையால்தென்னிந்தியரயில்வே அதிகாரிகள் இதைத் தீர்க்க ஆலோசித்து, உடனடியாக இச் சிற்றுண்டிச்சாலைக்கு விதிவிலக்கு அளித்து, மக்கள் மனதை மாற்றி, பிரயாணிகளுக்கு முன்போல் சௌகரியம் செய்துகொடுக்கவேண்டுமென கோரப்படுகிறது.

ஈரோடு,
10 4-50. செல்வநாயகம்.

ஆய்க்கவுண்டன் பாளையம்

ஆ. க. பாளையம், மார்ச். 31— 30—3—50 அன்று மாலை இவ்வூர் தி. மு. க. கிளைத்துவக்க விழா, அழகிரி மன்றலில் தோழர் என். இராதினம் அவர்கள் தலைமையில் துவக்கப்பட்டது. தோழர் ஜி. மாரப்பன் சமுதாய முன்னேற்றம், தொழிலாளர் நிலை குறித்து விளக்கவுரையாற்றினர், அடுத்துத் தோழர்கள் ஏ. பி. தர்மலிங்கம், தோழர் சி. பி. சிற்றரசு ஆகியோர் மத, இதிகாச, கடவுள் துறைகளிலுள்ள கேட்டினை விளக்கி, மற்றும் தி. மு. க. வின் அவசியம்பற்றியும் பேசினார்கள். முடிவாகத் தோழர் டி. கே. சீனிவாசன் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.